# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
## கலைமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி-2020/2021

மேற்படி கற்கைநெறிக்கு 20.02.2024 இற்கு முன்னர் கோரப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைவாக மாணவர்களை தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆவணங்களின் மதிப்பீட்டு பெறுபேறுகளின் பிரகாரம் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கற்கைநெறியினை பதிவு செய்வதற்காக கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரம் மற்றும் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரஒழுங்கு தொடர்பான விபரங்களுக்கு: **https://bit.ly/4ectp3P**

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கீழ் உள்ள இணைப்பில் காணப்படும் ஆவணங்களை பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கற்கைநெறிக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தையும், புகைப்படம் உறுதிப்படுத்தும் படிவத்தினையும் பூர்த்தி செய்து மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டையும் சமர்ப்பித்து தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேர ஒழுங்கின் பிரகாரம் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*பாடத் தெரிவு தொடர்பாக வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்றினை பதிவு நடவடிக்கைகளின் பின்னர் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வழிகாட்டற் கருத்தரங்கில் பங்குபற்றிய பின்னர் பாடத் தெரிவினை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்*

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்**

- *பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம்*
- *புகைப்படம் உறுதிப்படுத்தும் படிவம்*
- *மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டு (மூலப்பிரதி)*
- *கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (க.பொ.த சாதாரண மற்றும் க.பொ.த உயர்தர பெறுபேற்று சான்றிதழ்களின் மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)*
- *பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)*
- *திருமணச் சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)*
- *தேசிய அடையாள அட்டை (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)*
- *தொழில் புரிவோராயின் தற்போது வகிக்கும் பதவியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்*

**கற்கைநெறிக்கட்டணம் தொடர்பான விபரம்**

| | |
|---|---|
| **பதிவுக்கட்டணம்** | ரூபா 80,000 |
| 2ம் வருடம் 2ம் அரையாண்டு | ரூபா 40,000 |
| 3ம் வருடம் 2ம் அரையாண்டு | ரூபா 40,000 |

பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 80,000.00 இனை 890032340002142 கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் செலுத்தப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைகக்கழகத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரஒழுங்கின் பிரகாரம் நேரில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல், ஏற்கனவே உயர்கல்வி நிறுவனமொன்றில் உள்வாரியாகவோ எதாவது கற்கைநெறியின் பொருட்டு பதிவுகளை மேற்கொண்டிருத்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமூகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன்,எக்காரணம் கொண்டும் கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது, என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவிப்பதிவாளர்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
21.08.2024